| அனுப்புநர் | பெறுநர் |
| --- | --- |
| தண்.வசுந்தராதேவி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | செய்தி ஆசிரியர்<br>அனைத்து செய்தி ஊடகங்கள். |

ந.க.எண்.234157/எப்1/2018 நாள் : 20.06.2019

ஐயா/ அம்மையீர்,

பொருள் : இடைநிலை/மேல்நிலை முதலாம் ஆண்டு/மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு – புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டமை – மார்ச் 2020 பருவம் முதல் புதிய பாடத்திட்டத்தில் மட்டும் தேர்வுகளை நடத்துதல் குறித்த செய்திக்குறிப்பு வெளியிட வேண்டுதல் – சார்பு.

------

2018–19–ம் கல்வியாண்டில் பதினோறாம் வகுப்புக்கும் (+1) 2019–2020–ம் கல்வியாண்டு முதல் பத்தாம் வகுப்பு (10) மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புகளுக்கும் (+2) புதிய பாடத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால், மார்ச் 2020 பருவம் முதல் இடைநிலை/மேல்நிலை முதலாம் ஆண்டு/மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வுகளை புதிய பாடத்திட்டத்தில் மட்டும் நடத்துதல் தொடர்பான செய்திக்குறிப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இச்செய்திக்குறிப்பை தனித் தேர்வர்கள் மற்றும் பொதுமக்கள் அறியும் வண்ணம் தங்கள் நாளேட்டில் / தொலைக்காட்சியில் / வானொலியில் செய்தியாக வெளியிடுமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

‘இது விளம்பரம் அல்ல’ எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**இணைப்பு:** செய்திக்குறிப்பு

தங்கள் நம்பிக்கையுள்ள,

ஒம்/–
இயக்குநர்

## அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6

## மார்ச் 2020 பருவம் முதல் இடைநிலை / மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளை புதிய பாடத்திட்டத்தில் மட்டும் நடத்துதல் குறித்த செய்திக்குறிப்பு

அரசாணை (நிலை) எண்.99, பள்ளிக்கல்வி (க.ஆ.ப) துறை, நாள்.22.05.17. –ன்படி, 2018–19–ம் கல்வியாண்டு முதல் பதினோறாம் வகுப்புக்கும் (+1) 2019–2020–ம் கல்வியாண்டு முதல் பத்தாம் வகுப்பு (10) மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புகளுக்கும் (+2) புதிய பாடத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, மார்ச் 2020 பருவம் முதல் நடத்தப்படும் இடைநிலை / மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் புதிய பாடத்திட்டத்தின்படி மட்டுமே நடத்தப்படும். **மார்ச் 2020 பருவம் முதல் பழைய பாடத்திட்டத்தில் இடைநிலை / மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் நடத்தப்படாது.**

ஏற்கனவே பழைய பாடத்திட்டத்தில் இடைநிலை / மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதி தேர்ச்சி பெறாத தேர்வர்கள், தேர்ச்சி பெறாத / வருகை புரியாத பாடங்களை மட்டும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் மார்ச் 2020 பருவம் முதல் நடைபெறும் தேர்வுகளில் எழுதிக் கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

ஒம்/–
**இயக்குநர்**

இடம் : சென்னை – 600 006
நாள் : 20.06.2019